IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 92/2014

Deposition of Witness : PW-1

Name : தீனாதயாளு
Father's Name /W/o : கோவிந்தராஜுலு
Religion : இந்து
Caste : எஸ்.சி
Calling : வியாபாரம்
Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.04.2022.

குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளோமோ புரடக்சன் படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் மேட்ச் இண்டஸ்ரிஸ், ரியல் எஸ்டேட், முன்பு பொருட்களை வாங்கி தவணையில் கொடுக்கும் நிறுவனம் விஜய் என் கோ என்ற பெயரில் இருந்து இதுபோன்ற பல தொழில் செய்து வந்தேன். நான் பைனாஸ் தொழிலும் செய்து வந்தேன் என்றால் இல்லை. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2014-ல் கொடுத்த பவர் ரத்து செய்வதற்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2014-லில் பவருக்கு முன்பு எனக்கு பிரதிவாதிகள் 1, 2 பவர் கொடுத்தார்கள் என்பது தான் இந்த வழக்கு என்றால் ஆம். எனக்கு பவர் கொடுத்து அதன் படி செயல்பட்ட பிறகு வேறு ஒருவருக்கு பவர் கொடுத்தால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். பவர் படி பிளாட்டுகள் விற்பனை செய்து விற்ற பிறகு மற்றொருவருக்கு பவர் கொடுத்துள்ளது சட்டப்படி

செல்லாது. நான் முதலாவது இரண்டாவது பிரதிவாதிகளின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் தான் கையெழுத்திட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரம் 2008-ல் ரத்து செய்யப்பட்டது என்றால் ஆம். பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. அசல் வழக்கு எண்.92/2014 வழக்கை தவிர வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு அளிக்கப்பட்ட பொது அதிகாரமானது 2008-ல் ரத்து செய்யப்பட்டுள்ளபோது நான் அந்த அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் ரத்து செய்ததை எதிர்த்து நான் நடவடிக்கை எடுக்காத நிலையில் இந்த வழக்கு பரிகாரமே தவறு என்றால் சரியல்ல.